www.tamilarangam.net




The NEW PERSPECTIVE

# புதியகண்ணோட்டம்

வெளியீடு—7 1988 ஆவணி 01. ரூ: 2/-


## தமிழ்மக்கள் மத்தியில் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்குமெதிரான ஒரு கலாச்சாரத்தை வளர்ப்போம்!

## விடுதலைப் போராட்டத்தின் பெயரால் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொலைக்களச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருவதில் அனைவரும் அக்கறை கொள்வோம்!

## கொலைகாரர்களின் துப்பாக்கிகள் தங்களின் தலைக்கு வரும்வரை அதை நியாயப்படுத்தும் போக்கை இனியாவது யாரும் மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

# கந்தசாமியின் படுகொலை தமிழ்மக்களின் கண்களைத் திறக்கட்டும்

கந்தசாமியின் படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

ஆனால், கந்தசாமியின் படுகொலை தமிழ் மக்களுக்கு உள்ளே நடந்த முதலாவது படுகொலை அல்ல; மூவாயிரத்து எழுநூறாவது படுகொலை.

அதே வேளை, இதுதான் இறுதிப் படுகொலை என்றுமில்லை. இவை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரமுகர்கள், பெரிய மனிதர்கள், அறிவு ஜீவிகள் ஆகியோரில் பலர் இன்னும் தொடர்ந்து இப் படுகொலைகளை மறைமுகமாக ஆதரிக்கின்றார்கள்.

இவர்கள் தங்களின் தலைகளை நோக்கி இந்தக் கொலைகாரர்களின் துப்பாக்கிகள் வரும் வரை அதன் ஆபத்தைப் புரிந்தவர்களாகவோ அதை எதிர்ப்பவர்களாகவோ இல்லை.

கந்தசாமியை யார் படுகொலை செய்தார்கள் என்பது இங்கு பிரதானமானது அல்ல.

ஒட்டுமொத்தத்தில் இப்படியான படுகொலைகள் ஏன் நடக்கின்றன— எப்படி நடக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளவும்,

இந்த வகையான படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழிகள் என்ன என்பதைக் கண்டறிவதும்தான் பிரதானமானவையாகும்.

கந்தசாமி ஒரு பிரமுகராயினும், அவர் பிரபலமான பிரமுகர் அல்ல.

இதனால் அவரின் படுகொலை தமிழ் மக்கள் மத்தியில் எவ்வித பரபரப்பும் ஏற்படுத்தவில்லை.

கந்தசாமியோடு பழகியவர்களும், அவரோடு இணைந்து புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபட்டவர்களும், கந்தசாமியை நன்கு அறிந்த வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் அதிகாரிகளுக்குமே இப் படுகொலை அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

இன்னொரு பக்கத்தில் இவ்வாறான கடத்தல்கள்— படுகொலைகள் தமிழ் மக்கள் மத்தியில் நாளாந்த சம்பவங்கள் என்பதனாலும், கந்தசாமியும் பல ஆயிரங்களில் ஒருவனாகி விட்டார்,

பிரமுகர்களுக்குள் பிரமுகரான கந்தசாமியின் இறப்பால் அதிர்ச்சியடைந்து, தமக்குள் தாங்களே கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கும் பிரமுகர்கள் இனியாவது தமிழ் மக்கள் மத்தியில் கொலைகளுக்கு எதிராகவும் கொள்ளைகளுக்கு எதிராகவும் ஓர் உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அதை ஒரு கலாச்சாரமாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்று சிந்திப்பார்களா? முயற்சிப்பார்களா?

சமுதாயத்தில் குற்றச் செயல்கள் எப்படி நிகழ்கின்றன? அதைத் தடுப்பது எப்படி? என்று கேள்வி எழுப்பி' அதற்கு விடை கண்டு சரியாகவும் முறையாகவும் அணுகாமல், எல்லாக் குற்றச் செயல்களுக்கும் 'சமூகவிரோதி' பட்டமளித்து, அதற்கான ஒரே தண்டனை மரண தண்டனை என்று நடைபெற்ற—

மின்கம்பக் கொலைகளை ரசித்ததன், பாராட்டியதன் அடுத்தகட்ட விளைவுதான் சகோதரப் போராளிகளைப் படுகொலை செய்தல் இடம் பெற்றதும் ஆகும்.

போராளிகள் படுகொலை செய்யப்பட்டபோது ஒரு பகுதி பிரமுகர்கள் 'இது பெடியன்களின் பிரச்சினை" என்று அதனைத் தங்களோடு சம்பந்தமற்றது என்று ஒதுக்கி விட்டார்கள்;

இன்னொரு பகுதி பிரமுகர்கள், வலிமையான இயக்கத்திற்கு மேலும் வலுக்கொடுத்து அந்த மோதல்களுக்கும், படுகொலைகளுக்கும் ஊக்கமளித்தார்கள்.

இதன் விளைவுதான் இன்று அறிவாளிகள், சமூக சேவையாளர்கள் எந்தவித பட்டங்களுமின்றி மிக எளிமையாகப் படுகொலை செய்யப்படுகின்றார்கள்.

கந்தசாமியின் படுகொடுலையை —கந்தசாமியின் விவகார எல்லைக்குள் மட்டும் சிந்திப்பதால்— யார் செய்தார்கள் என்பதில் மட்டும் கவனம் செலுத்துவதால் இங்கு பலன் இல்லை.

பேராசிரியர் வித்தியானந்தன், தன் உயிரை மட்டும் கவனத்திற்கொண்டதால்—

இன்று வெளி நாட்டில் உயிரோடு இருக்கிறார்.

கந்தசாமி தன் சுய சுதந்திரத்தைப் பற்றிச் சிந்தித்ததால்—

இன்று உயிரோடு இல்லை.

அவரை எப்படிக் கொலை செய்தார்கள் என்பதுகூட யாருக்கும் தெரியாமல் போய்விட்டது.

(-தொடர்ச்சி 2ம் பக்கம்......)




1983 ஜீலையின் இரத்த ஆறுகள் நிரந்தர சமாதானத்திற்கான ஒரு போராட்டத்தை உந்தித் தள்ளின. அந்த நினைவுகளின் ஐந்தாவது ஆண்டானது உடனடி சமாதானத்திற்கான உந்தலைத் தரட்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


(...... 1ம் பக்கத் தொடர்ச்சி)

இபக்க மோதல்கள்—படுகொலைகளின் அத்திவாரத்தில் தமிழ்ப் பிரமுகர்கள் பலர் தங்கள் அபிலாசைகளைத் தீர்த்துக் கொள்ள நினைத்தார்கள்.

இன்று பிரமுகர் கந்தசாமியின் படுகொலையின் படிக்கட்டில் வேறு ஒரு சில பிரமுகர்கள் தங்கள் சொந்த அபிலாசைகளைத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை—

கந்தசாமியின் படுகொலையினால் அதிர்ச்சியடைந்து கண்ணீர் வடிப்பவர்கள் இனியாவது தங்கள் கண்களைத் திறக்க வேண்டும் என்றும் அக்கறையிலேயே புதிய கண்ணோட்டம் சில விடயங்களைச் சூசகமாகச் சொல்ல முற்படுகின்றது.

## கடிதம் 1

**யாழ்ப்பாணத்திலிருந்து 'ஆசாமி' என்று மட்டும் பெயர் குறிப்பிட்டு ஒருவர் அனுப்பி வைத்துள்ள கடிதம். அனல் கொஞ்சம் அதிகமாகவே வீசுகிறது. ஆனாலும் அவர் சுதந்திரத்தில் கைபோடாமல் அப்படியே இங்கு தரப்படுகிறது:**

புலிகள் செய்து வருகிற பொய்ப் பிரச்சாரங்கள் முறியடிக்கப்பட வேண்டியவைதான். இந்திய இராணுவத்தை அங்கு அடித்தோம்' இங்கு கண்ணி வெடி வைத்துக் கொன்றோம் என்பவை போன்ற பிரச்சாரங்களும், பொய்களும் புலிகள் மிகவும் பலமானவர்கள் என்ற மாயையை மக்கள் மனதில் பதிய வைக்கிறதுக்கு உதவுகின்றன.

இந்தப் பொய்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வது அவசியமே. எத்தனை புலிகள் செத்தன. எவ்வளவு ஆயுதங்கள் நகைகள் பிடிபட்டன என்பவை மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். மறுக்கவில்லை.

ஆனால் இவைகளை எழுதுவதுடன் நின்றுவிடுவதால் மட்டும் புலிகளை ஒழித்துவிட முடியாது. இன்றைய தமிழர் நிலை ஒழிக்கப்பட புலிகள் அழிக்கப்பட வேண்டியது அவசியம். இது யதார்த்தம். அரசியல் புரிந்தவர், உண்மையான அரசியலைத் தெரிந்தவர் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

தமிழ் பேசும் மக்களிடையே புலிகளுக்கு ஆதரவு அதிகம் என்பது வெளியில் தெரியும் மாயையே தவிர வேறு இல்லை. தமிழன் இன்று 'தலை'க்குப் பயப்படவில்லை. 'இடுப்புக்கே' பயப்படுகிறான். அதனால் புலிகளுக்குப் பயந்து தமது சுய சிந்தனையை அடகு வைத்து தன் ஜனநாயகத்திற்கு ஆபத்தைத் தானே விளைவித்துள்ளான்.

வாயில் பூட்டுடன் திரிகிறான். இவன்—குறிப்பாக யாழ் குடா நாட்டான்—எல்லாக் காலத்திலும் இப்படித்தான்: இவனுக்கு தேவை 'சல்லி' தான் எப்படியும் 'சல்லி' சம்பாதித்தால், அதுக்குரிய வழிகள் இருந்தால் போதும், எதையும் செய்வான். எதற்கும் ஆமாசாமி போடுவான். சிறீசபாரத்தினம் நினைவு நாளுக்கும் கடை பூட்டுவான். மறுநாள் புலி சொன்னாலும் பூட்டுவான் வெள்ளைக்காரனை 'நக்கித் திண்டு' வாழ்ந்த இனம் அல்லவா? கொள்கை என்ன இவனுக்கு?

இவனை (நம் மக்கள்தான்) திருத்தி எடுப்பது மிக மிக ........ கஷ்டம். பேப்பர் எழுதி திருத்த முடியாது, ஏனெனில் இவனின் கல்வி சோதினைக்கும், உத்தியோகத்திற்கும் மட்டுமே உரியது. பேப்பர் வாங்கி வாசித்து உண்மையை அறிய இவனுக்கு அறிவு போதாது,

இப்படியானவன் மத்தியில் என்ன செய்வது? எதை எழுதுவது?

சரி, எமது தலைக்கு இடுப்பில் இருப்பது வரும் வரைக்கும் உண்மையை சொல்ல முயலலாம்.

இதற்காக நீங்கள் பத்திரிகையில் எழுத வேண்டியது முன்பு குறிப்பிட்ட 'சாதனை,கள் மாத்திரமல்ல; புலிகளின் நகை துவக்கு எடுப்பது மட்டுமல்ல.

புலிகளின் அரசியலை எழுதுங்கள். உண்மை சுயரூபத்தை வெளியே கொண்டுவாருங்கள்.

புலிகளின் பின்னணி என்ன? எந்த ஏகாதிபத்தியம் புலிகளுக்கு இறைச்சி போடுகிறது.

இந்தியாவை எதிர்த்து அது தமிழனுக்கு உரிமை தராது என்பதற்சாகவா? அல்லது ஏகாதிபத்தியம் ஒன்றின் கையாளாகச் செயற்படுவதாலா? என்பது பற்றி எழுதுங்கள்.

புலிகள் ரெலோவை, ஈ.பி.ஆர்.எல்.எப் பை, புளொட்டை, தம்பாவைச் சுட ஏன் பேசாமல் இருந்தான் இவன் . (செத்தது எங்கடை ஒவ்வொருவரினதும் குழந்தைகள் தான் மறந்தா போனீர்கள்?)

கொலை கொள்ளை முதலிலே செய்தவன் யார்? புலிகள் என்பதில் சந்தேகமென்ன?

இப்படியான விடயங்களை எழுதுங்கள்' எழுதும் பேப்பரை விலைக்கு மட்டும் விற்காதீர்கள். தமிழன் 'ஓசி' யில் தான் பேப்பர் படிப்பவன் மறக்க வேண்டாம்.

எல்லாம் 'ஓசி' யில் கிடைப்பதையே அவன் விரும்புகிறவன். இல்லாவிட்டால் இந்திய இராணுவம் வந்து தமது பிரச்சினையைத் தீர்க்கும் என்று விசரனைப்போல சிந்தித்திருப்பானா?

இவைகளை எழுதுங்கள்:

மனித சுதந்திரம் ஜனநாயகம்
பேச்சு சுதந்திரம்
எழுத்துச் சுதந்திரம்

மறக்காமல் 'துவக்கு' மட்டும் எதனையும் சாதிக்காது என்று எழுதுங்கள்.

மீண்டும் ஜனநாயகத்திற்குத் திரும்ப 'தேர்தலை'— அதுவே இப்போதுள்ள ஒரே வழி என்பதால் அதனை வேண்டும் என எழுதுங்கள்.



**1970 களில் திரு கந்தசாமி கொழும்பில் கம்பனி சட்டத் துறையில் முன்னணி வழக்குரைஞராக விளங்கினார்.**
**1977 ஆவணியில் இடம்பெற்ற தமிழர் எதிர்ப்பு கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல்—அகதிகளுக்கு புனர்வாழ்வளித்தல் வேலைத்திட்டத்தில் மறைந்த மதிப்பிற்குரிய தொழிற்சங்கத் தலைவர் திரு கே.சி.நித்தியானந்தாவின் தலைமையின் கீழ் கடமையாற்றினார். கடந்த 12 ஆண்டு காலமாக அகதிகள் மறுவாழ்வு, குடியமர்த்தல், ஆய்வு, தகவல் சேகரித்தல் — பரப்புதல், வெளியீடுகள், நூல்கள், சிறு வெளியீடுகள் ஆகியவற்றில் முழுநேரமாக ஈடுபட்டார். வெளி நாடுகளிலுள்ள சமூக சேவை நிதி உதவி நிறுவனங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக இருந்தார்.**

**லண்டனில் உள்ள சிவஞானம் என்பவருக்கு 31.05.88 தேதியிட்டு கந்தசாமி எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி:**

...ilitation Consortium which would b... cordinating Committee ...the NGOs in Jaffna. A copy of the memorandum has reached EROS who were very disturbed by these efforts. The reason for such react-ion is not clear, and one can only hazard a guess.

4. One the 29th (or 30th) March I returned to Jaffna from Colombo and when I was in the office of TRRO, in the afternoon, arepresenta-tive of EROS (whose name later I learnt as Ravi) wanted an appoin-tment to meet me, and I suggested 6 p.m. on Saturday (2/4/88), but he was insisting that they should meet methe same day. I told him that I have just come, and I wished to sort out my work at TRRO, and said that Saturday would be convenient and leisurely. He was dissatisfied, and went away. In the evening by about 6p.m. three people (whose names I learnt only on the following day) came and said that they were from EROS and wanted to meet me. I told them the meeting is arranged for Saturday and that Iwould like to leave it at that. They said the meeting was urgent, and it must be held before the 4th of April. Then I said that Iwill try to finish my morning's work the following day, and I would meet them at 11a.m. Then they said thatIcannot trifle with an Organisation like EROS, etc. and that they would send me a van the following morning at 11a.m. and that I should come to their office.

5. However, the following morning the three of them (Ravi, Vasanthan, and Andrew Joseph) came at 11.30 a.m. and there was no suggestion that I should go to their office. The discussion was centee-ered round the memorandum circulated by TRRO under my signature: They said that they would distupt any rehabilitation work not in conformity with their policy, and no work will be tolerated except with their permission(as an after-thought they added 'with the permission of LTTE'). When I asked them what their policy was they said they cannot announce it, but permission should be obtained case by case . They also reminded that Kathiramalai was killed because he acted against the policy of EROS, and that could be the fate of others as well. The meeting was not as rough as it was the previous day, but was possibly intented to be intimidatory. I later learnt in Trincomalee that it was a "warning".

www.tamilarangam.net



மற்ற புலிகள் எல்லோரையும் ஒழிச்சுப் போட்டு கதிரையில் இருக்க ஆசைப் பட்டினம்.

இப்ப என்ன நடக்குது?

'காட்டிக் கொடுக்கிறான்' என்கிற பொய்ப் பிரச்சாரம் எத்தனை நாளைக்கு ?

ஆமியில் பிடிபட்ட புலிகள் யாரை ஐயா காட்டிக் கொடுக்கினம்?

இவைகளை எழுதுங்கள்.

கண்ட இடத்தில் தலையில் சூடு விழுது. 'றோ', பவுடர், பெண் என்ற காரணங்கள் பின்னால் வருகிறது.

ஒரு நீதி மன்றம் கூட ஒருவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்க எவ்வளவு வருடம் செல்லுது. எத்தனை பேரைச் சுட்டாச்சு. டுங்களால் எதையாவது திருத்த முடிந்ததா?

இவைகளை எழுதுங்கள்.

—— 'ஆசாமி'






டானியல் ஒட்டேகா

நிக்கரகுவா மக்களின் எழுச்சியினால் அமெரிக்கக் கண்டத்தின் வயிற்றிலிருந்து ஒரு புரட்சிக் குழந்தை வீறுகொண்டு வெடித்தெழுந்த நாள்

**ஆடி 19**

நினைவு நாட்கள்
நெஞ்சின் வடுவை
வருடி விட்டுப் போகும்
வலி மட்டும்
நிரந்தரமாய்.

காற்றென்ன செய்யும் பாவம்
தன்பாட்டிற்குச் சத்தமிட்டிருக்கும்
கடலலை மிக வெகுண்டு
தரையிற் தலையடித்தழுதிருக்கும்
முகமிழந்த நிலமகளும் உடல் கூனிப்
பெரிதாய்
தன் வயிற்றைப் போய்
நொந்திருப்பாள்.

நடந்தது அது
யாவும் வெறித்தபடியிருக்க
பூட்டிய சிறைக் கதவுள் அந்தப்
'புனித வேள்வி'
யாரங்கே?
வானத்திலிருந்து வேடிக்கை பார்க்கும்
விண்மீன்களைப் போல
உலகில் உலவும் ஒவ்வொரு மனிதனும்
சடலங்களாய் விறைத்திருக்க
என்ன மதில்களைப் பிளந்து
நரசிம்மனா வரப்போகிறான்
நீதி கேட்டு.
அநாதையாய்ப்போன
அபயக் குரல்கள்
மண்டபத்துள்ளேயே
மோதி ஓய்ந்தன.
துடித்துத் துடித்து
மரணித்த உடல்கள்
வடித்த ரத்தத்தின் பச்சை நெடிகூட
எத்தனை நாள்
நின்று நாறும்?
எல்லாம் மறைந்தன.
ஒன்றும் நடவாததுபோல
உலகம் திரும்பவும் ஓடுது.
கலண்டரில் மட்டும்
அந்த நாள்
திரும்பத் திரும்ப வந்து போகுது.

**ஆடி 25-27.**



மட்டக்களப்பில்..... மக்களின் ஜனநாயகத்துக்காகப் போராடி

13-07-88 அன்று மறைந்த

**தோழர் (கோபாலன்) சயந்தனுக்கும்,**

22-07-88 அன்று மறைந்த

**தோழர் (ஆனந்தன்) ரவிவர்மனுக்கும்**

**கண்ணீர் அஞ்சலி!**

தோழர் ரவிவர்மனின் பூதவுடல்

## ஆபிரிக்கத்து மக்களின் இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற தலைவா!



நெல்சன் மண்டேலா 1918 ஆடி 18

வெள்ளைநிற வெறியர்களின் இரும்புக்கரங்கள் இருபத்தாறு ஆண்டுகளாக சிறையிலடைத்திருக்கும் உனது 70 வது பிறந்த நாளை உலக மக்களோடு நாமும் நினைவுகூருகின்றோம்.



## குட்டிக் கதைகள்—5

### எலியும் தவளையும்

ஓர் எலியும் தவளையும் ரொம்ப நட்பாய் இருந்தன. எலியின் வளைக்கு அடிக்கடி தவளை வரும். தன்னிடமுள்ள பண்டங்களைத் தவளைக்கு எலி கொடுக்கும். இதனுல் தன் வீட்டிற்கு வரும்படி எலியைத் தவளை அடிக்கடி அழைக்கும். ஆனுல் தவளையின் வீடு கால்வாய்க்கு அப்புறம் இருந்தபடியால் எலி போக விரும்பவில்லை. ஒரு நாள் தவளை வற்புறுத்தி அழைத்தது; தன் முதுகிலேயே அதை தூக்கிக் கொண்டு கால்வாயைக் கடப்பதாகவும் சொல்லிற்று. எலியும் சம்மதித்தது; அதன் பேரில் தவளையின் காலில் ஒரு தடித்த புல்லைக் கட்டி, அந்தப் புல்லின் மற்றொரு நுனியை எலியின் காலில் கட்டிக் கொண்டு பிரயாணம் புறப்பட்டன.

தவளையின் முதுகில் எலி உட்கார்ந்து பாதி கால்வாய்க்குப் போனதும் தவளைக்கு ஒரு வஞ்சக யோசனை தோன்றியது. எலியைக் கொன்று விட்டால் அது சேர்த்து வைத்திருக்கும் பண்டங்களையெல்லாம் தான் எடுத்துக் கொள்ளலாமே என்று நினைத்தது. உடனே தவளை தண்ணீருக்குள் கொஞ்சம் கீழ் நோக்கி இறங்கியது. தண்ணீரில் தவித்த எலி கத்தியது. அப்போது மேலே பறந்து கொண்டிருந்த ஒரு பருந்து எலியின் கூச்சலைக் கேட்டு அதைக் கவ்வித் தூக்கிக் கொண்டு பறந்தது. எலியைத் தூக்கியபோது எலியின் காலில் கட்டியிருந்த தவளையும் அதோடு வந்தது. இரண்டையும் பருந்து சாப்பிட்டது.

குறிப்பு: இது ஈசாப் குட்டிக்கதை, புலிகள், புலிகளோடு நட்புக் கொண்டாடுகிறவர்கள், அல்லது புதிதாய் புலிகளின் வாலைப் பிடிக்க 'வழிந்து' கொண்டிருப்பவர்கள்......... இவர்களின் கதி பற்றியும் இந்தக் கதையில் சொல்லப்பட்டிருப்பதாக நீங்கள் எடுத்துக்கொண்டால்—அது உங்கள் சுதந்திரக் கண்ணோட்டம். நாம் என்ன சொல்ல இருக்கிறது?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சரியான இயக்கமொன்று மேலாதிக்கம் பெறமுடியாமல் போனதால் ஈழவிடுதலைப்போராட்டம் சிதைந்து திசைதிரும்பியது.

# வடக்கிலும் தெற்கிலும் இப்போது இனவாதச் சக்திகள் மட்டுமே ஆயுதம் ஏந்தியுள்ளனர்.

# ஐக்கியம் ஜனநாயகம் சமாதானம் இவற்றை ஏற்படுத்துவதே உடனடித் தேவையாகும்.

## தோழர் ஜோ செனிவிரத்ன பேட்டி.

தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளில் குறிப்பிடத் தகுந்தவகையில் செயற்பட்டுவரும் 'மக்கள் புரட்சிகரச் சக்தி' என்ற அமைப்பின் தலைவர்களில் ஒருவரான தோழர் ஜோ செனிவிரத்ன 42 வயது நிரம்பியவர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா உட்பட தென்னிலங்கை 'மக்கள் புரட்சிகர சக்தி' அமைப்பாளர்களையும் உள்ளடக்கிய 23 பேர் மீதான சிறீலங்கா அரசின் சதிமுயற்சிக் குற்றச்சாட்டின் பேரில், சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 13 பேர்களில் தோழர் ஜோ செனிவிரத்னவும் ஒருவர்.

அரசைக் கவிழ்க்கச் சதிசெய்தமை,

ஆயுதங்கள் வெடிமருந்துகள் சேகரிப்பில் ஈடுபட்டமை,

ஈழவிடுதலை இயக்கமொன்றின் உதவியுடன் ஆயுதப் பயிற்சி எடுத்தமை

மக்களை அரசுக்கெதிராகத் தூண்டிவிட்டமை

ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் பின்வரும் 23 பேர்களின் மீதும் சிறீலங்கா அரசு வழக்குத் தொடர்ந்தது.

தயான், ஜயதிலக, ஜோ.செனிவிரட்ன, தயாபால, தீரானகம, புல்சரா லியனகே, சிந்தன டி சில்வா, பூரணக டி சில்வா, கே.முத்துலிங்கம், க.பத்மநாபா, ராம் மாணிக்கலிங்கம், கே.சரத் காமினி, ஜி.எம்.தர்மசேன, பி.கால்லகே, கே.எம் கருணதாச, எச்.கே.தயானந்த, எல்.கல்தேரா, இக்பால், கே.எம்.கருணாரத்ன ஆர்.ஹென்றி, ஆர்.ஏ.ஜெயரத்ன, கே.பியதாச, சரத் சில்வா, பி.ஆரியரத்ன டபிள்யூ.சித்திரசேன.

13.04.86 அன்று 13 பேரை சிறீலங்கா இராணுவம் கைது செய்து சிறையிலடைத்தது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் 22.04.88 அன்று விடுதலை செய்யப்பட்ட இந்த 'மக்கள் புரட்சிகர சக்தி' அமைப்பைச் சேர்ந்தவர்களில் ஒருவரான தோழர்.ஜோ.செனிவிரத்ன அவர்களைப் பேட்டி கண்டோம்.

இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் ( M I R J E )தேசிய அமைப்பாளராக முழுநேரப் பணியாற்றும் தோழர் ஜோ செனிவிரத்ன கொழும்பு கேரி கல்லூரியின் முன்னாள் ஆசிரியராவார்.

**உங்கள் அமைப்பின் குறிக்கோள் பற்றிச் சுருக்கமாக கூறுங்கள்?**

இலங்கையில் சமாதானம், சமத்துவம், உண்மையான ஜனநாயகத்தை உருவாக்குவதே எமது குறிக்கோளாகும். இதற்காக நீண்டகால செயற்திட்டமாக நாம் இலங்கை முழுவதிலும் சோஷலிசப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் வேலை செய்கிறோம்.

ஆனால் அதே வேளையில் உடனடிக் கால செயல்திட்டமான ஜனநாயகம், மனித உரிமைகள், சிறுபான்மை இன உரிமைகள் ஆகியவற்றிற்கான போராட்டங்களுக்கு எமது முற்றுமுழுதான ஆதரவை அளிப்பதுடன் பெருந்தேசிய இனவாதத்தையும் எதேச்சாதிகாரத்தையும் எதிர்க்கிறோம்.

**ஈழ விடுதலைப் போராட்டம் குறித்து உங்கள் அமைப்பு எத்தகைய பார்வையைக் கொண்டிருந்தது?**

எமது அமைப்பு தொடக்கத்திலிருந்தே ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தத்துவரீதியிலும் நடைமுறைரீதியிலும் அதனால் இயன்ற அளவு ஆதரவைக் கொடுத்து வந்துள்ளது. எமது தலைவர்களில் ஒருவரான தோழர் தயான் ஜயதிலக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் தத்துவ ரீதியான அங்கீகாரத்தையும் ஆதரவையும் அளிக்கும் வகையில் கருத்துப் போராட்டம் நடத்திய முதல் தென்னிலங்கை மார்க்சியவாதி ஆவர்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை நாம் தனி ஈழவிடுதலைக்காக நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்திற்கு எம்மால் இயன்ற ஆதரவைக் கொடுத்து வந்துள்ளோம். ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை முழுவதிலும் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றத்தின் காரணமாக மேலும் ஆயுதப் போராட்டத்தைக் கையாள்வது தமிழ் மக்களின் அழிவிற்குத்தான் வழிவகுக்கும் என்று எண்ணுகின்றோம். ஏனெனில் தற்போது வடக்கிலும் தெற்கிலும் அரசியல் தீர்வுக்கு எதிராக இனவாதச் சக்திகள் மட்டுமே ஆயுதம் ஏந்தியுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாசைகள் ஓர் ஐக்கிய இலங்கையில் பூர்த்தி செய்யப்படலாம் என்ற கருத்தை நாம் கொண்டுள்ள போதிலும், சிறீலங்காவுடன் சேர்ந்து நிற்பதோ அல்லது பிரிந்து தனியே இருப்பதோ என்ற தீர்மானத்தை தமிழ் மக்கள் மட்டுமே எடுக்கலாம் என்ற கொள்கையை நாம் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம். அதுவே அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்பதன் அர்த்தமாகும்.

**சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்மக்களின் நியாயமான போராட்டத்தைப் பற்றி விளக்கும்போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்?**

ஒட்டுமொத்தமாக சிங்களமக்களின் மனப்பான்மை, இனவாதத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற போதிலும் தமிழ்மக்கள் அனுபவிக்கும் ஒடுக்குமுறையையும் அவர்களின் அபிலாசைகளையும் எளிதான வகையில் விளக்கும் போது சிங்கள மக்களின் அனுதாபத்தையும் சிலவேளைகளில் ஆதரவையும் பெறக் கூடியதாக இருந்தது. எனினும் இவ்வுணர்வை இனவாத முதலாளித்துவ அரசுக்கு எதிரான செய்முறையாக—நடவடிக்கையாக மாற்றுவதே கடினமான காரியமாகும்.

## கடிதம்—2

### திருகோணமலையிலிருந்து வங்கி ஊழியர் ஒருவர் அனுப்பி வைத்துள்ள கடிதம்:

ஆசிரியருக்கு.

புதிய கண்ணோட்டம் கடந்த 5 வெளியீடுகளையும் பார்த்தேன். உங்கள் கட்சிப் பத்திரிகை சம்பந்தமாய் எனக்குப் படும் விடயங்களை எழுத விருப்பம் கொண்டுள்ளேன்.

கொடூரக் குணாதிசயங்களோடு வளர்ச்சியடைந்திருக்கும் புலிகளும் அதேபாணியில் நாட்டை, மக்களை அழித்துவிட முனைகின்ற சக்திகளும் இல்லாதொழிக்கப்படவேண்டும், என்பதைப் பிரதான கடமையாகக் கொள்வது சரிதான். அதற்கான முயற்சிகளில் துணிவோடு இறங்குவதும் செயற்படுவதும் அவசியத் தேவையாக இருப்பதால் வரவேற்கப் படவேண்டியதே. ஆனால் அவைகளைப் பெரும்பகுதி செயலளவில் வைத்துக் கொண்டு, பத்திரிகையில் இன்றைய அரசியல் சூழ்நிலைமாற்றங்களைத் தெளிவுபடுத்தியும், இலங்கை, இந்திய அரசுகளின் எண்ணங்கள் திட்டங்களை எதிர்வுகூறும் அரசியல் விமர்சனக் கட்டுரைகளாகவும், தங்கள் கட்சியின் அரசியல்நிலைப்பாட்டு விளக்கங்களாகவும் எழுத வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். சர்வதேச அரசியல் நிலமைகள் குறித்தும் புதிய கண்ணோட்டத்தில் அவ்வப்போது கட்டுரைகள் செய்திகள் இடம்பெறச் செய்யலாமே?

ஈசாப் குட்டிக் கதைகளுக்கு மாணவர்களிடத்தில் ஆர்வமுள்ள வரவேற்பிருப்பதை அவதானித்தேன் தொடருங்கள். வேறும் சிறுசிறு குட்டிக்கதைகள் மூலம் நாட்டுநடப்புக்களை விளங்கப்படுத்தல் மிக நல்லது.

புனர்வாழ்வு புனரமைப்புச் சம்பந்தமான அறிவிப்புகளில் "எல்லாரும் கிழிச்சு முடிஞ்சுது, ஈ.பி. கிழிக்க வெளிக்கிட்டிருக்கு" என்று சில இடங்களிலிருந்து வருகிற கிண்டலைப் பொய்ப்பிக்கின்ற வகையில் நடந்து கொண்டால் அதுதான் உங்களைத் தனிப்படுத்திக் காட்டும். மற்றும் அனைத்துத் தமிழ்ப் பகுதிகளிலும் இருந்து கிடைக்கின்ற செய்திகளைத் தொகுத்துத் தருவது. துணுக்குகள் சித்திரங்கள் மூலம் ஒரே எழுத்துமயமாக உள்ளதை வாசிப்பதிலுள்ள வாசகனின் களைப்பை நீக்குவது, அழகுறக் கொண்டுவருவது என்பவற்றிலும் கவனமெடுங்கள்.

"ஈழவிடுதலைப் போராட்டம் முடிவடைந்து விட்டதா? தொடருமா?" என்பதற்கு புதிய கண்ணோட்டம் விளக்கமான பதில் தருமா?

இப்படிக்கு,
அன்புடன்,

பி.கு:—பத்திரிகையைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்குச் சந்தாதாரராகச் சேர விரும்புபவர்களுக்காகச் சந்தா விபரத்தினையும் முகவரியினையும் அறியத் தாருங்கள்.

### சந்தா விபரம்

| | |
|---|---|
| பிரதி ஒன்றுக்கு | 2.00 |
| 6 வெளியீடுகள் (தபாற்செலவு உட்பட) | 15.00 |
| 12 வெளியீடுகள் (தபாற்செலவு உட்பட) | 30.00 |

முகவரி:-
குசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

www.tamilarangam.net



ஐக்கிய இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழ்மக்களின் விலாசைகளைப் பூர்த்தி செய்வதைப் பெரும்பாலான சிங்கள மக்கள் ஆத ரிக்கின்றனர் என்பது எமது அபிப்பிராயமும் ஆகும். தெற்கில் வேலை செய் எமக்கு ஒரு பக்கத்தில் இனவாத முதலாளித்துவ யூ.என்.பி. அரசும் பயங்கரவாதமும், மறுபக்கத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற வாத பாராளுமன்ற கட்சிகளும் ம.வி.மு. கொலைகாரர்களும் பிரதான ட்டுக்கட்டையாக அமைந்துள்ளன.

எனினும் விஜய குமாரதுங்க போன்ற துணிச்சல்மிக்க தென்னில அரசியல்வாதிகள் தமது உயிரையும் கூட தியாகம் செய்யத் துணிந்து மையால் இனவாதிகளை வன்மையாக எதிர்க்கும் ஒரு புதிய அணியை வாக்கி அதற்கு பொது மக்களின் ஆதரவைத் திரட்டக் கூடியதாக இரு து. இந்நிலைமை மேலும் முன்னேற்றமடையக் கூடிய வாய்ப்புள்ளது.

**சிங்களமக்கள் கொல்லப்பட்டதை—கொல்லப்படுவதைப் பற்றி என்ன றுகின்றீர்கள்?**

வடக்கு கிழக்கில் சிங்கள இராணுவம் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவ மாக செயற்பட்டதும், அதனை எதிர்த்து போராடுதல் என்பதும் தமிழ் விடுதலைப் போராட்டத்தினுள் அடங்கும் ஒரு முக்கிய அம்சமாயிருந்தது. ஆயுதம் ஏந்திய இராணுவத்துடனும், எல்லைப் பிரதேசங்களிலுள்ள ஊர் காவற்படைக் காடையர்களுடனும் போர் தொடுத்து அவர்களைத் தாக்கு ம் என்பனதயும் தமிழ் விடுதலைப் போராளிகள் செய்யவேண்டியிருந்தது

எனினும் எல்லைப் பிரதேசங்களிலுள்ள அப்பாவிச் சிங்கள மக்களை கொலை செய்தல், கொழும்பு போன்ற நகரங்களில் குண்டு வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஏனெனில் இத்த கைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் சிங்கள மக்களுக்குள்ள தமிழ் விரோத மனப்பான்மை தூண்டப்பட்டு தமிழ் மக்களுக்கும் இனவாத சிங் கள அரசுக்கும் இடையான முரண்பாடு தமிழ் மக்களுக்கும் சிங்களமக்களு க்கும் இடையான முரண்பாடாக மாறும்.

**ஈழவிடுதலைப் போராட்டம் சிதைந்து திசை திரும்பிப் போனதற்குக் காரணங்கள் என்னவென்று நீங்கள் சொல்கிறீர்கள்?**

இதற்கு இரண்டு பிரதான காரணங்களை நாம் காண்கிறோம். முதலாவதாக தமிழ் இயக்கங்களின் மத்தியில் ஒரு சரியான சோசலிச திட் டத்தை வகுக்கக் கூடிய, இனவாதத்தை எதிர்க்கும் எண்ணப்பாடு கொண் ட இயக்கம் மேலாதிக்கம் செலுத்தாமையாகும். இரண்டாவதாக தெற் கில் இனவாத முதலாளித்துவ அரசை எதிர்த்து, தமிழ் மக்களின் நியாய மான போராட்டத்திற்கு ஆதரவளித்த முற்போக்குச் சக்திகள் தமது கொள்கைகளையும் சித்தாந்தத்தையும் சிங்களமக்கள் மத்தியில் பரவலாக்க முடியாமையாகும்.

இது ஒரிரு இயக்கங்களின் அல்லது தனிநபர்களின் பிழைகளால் உருவாகிய நிலைமை அல்ல. இதற்கான அடிப்படைக் காரணம் இலங்கையில் நிலவிய குறிப்பிட்ட அகவய, புறவய நிபந்தனைகள் ஆகும்.

**மாகாண சபைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்கிறதா?**

இல்லை. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் சட்டமாக்கப் பட்ட மாகாணசபைகளின் பல அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. அது மட்டுமன்றி ஆளுநரையும் முதலமைச்சரையும் நியமிக்கும் அதிகாரமும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது.

இதனால் தெற்கிலுள்ள முற்போக்குச் சக்திகள் அனை வரும் பேரினவாதச் சக்திகளின் போலிப் பிரச்சாரத்தை — அதாவது மாகாணசபைகள் சட்டத்தின் காரணமாக நாடு பிரிக்கப் படுகின்றது என்பதை—எதிர்த்து மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற் காகவும், வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைப்பதற்காகவும் போராடுதல் வேண்டும். அதன் மூலமே, சிங்கள முற்போக்குச் சக்திகள் தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியுமென நாம் கருதுகிறோம்.

**இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிய உங்கள் கருத்து?**

நாம் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை வரவேற்கிறோம். ஏனெனில் இவ்வொப்பந்தமும், மாகாணசபைகளும் தமிழ் மக்களினதும் தமிழ்விடுதலை போராளிகளினதும் உயிர்த் தியாகங்களினாலும் போராட்டத்தினாலும் வென்றெடுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளாகும். ஜனாதிபதியின் விருப் பத்திற் கிணங்க வழங்கப்படவில்லை.

இவ் ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அத்துடன் ஒப்பந் தம் கையொப்பமிடப்பட்டு பத்து மாதங்கள் முடிவடைந்த போதிலும் அதில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்கள் பல இதுவரையும் அமுல் செய்யப் படவில்லை. உ-ம்: தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை. எனினும் இலங்கை யின் தேசியப் பிரச்சனையை தீர்க்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க இவ் வொப்பந்தம் ஓர் அடிப்படையாக அமையும். ஆகவே ஒப்பந்தத்தை முற்றுமுழு தாக எதிர்த்து இனவாதத்திற்கு இடம் கொடுக்காமல் நாம் ஒப்பந்தத்தி னூடாக வென்றெடுக்கக் கூடிய உரிமைகளை வென்றெடுத்து ஐக்கியம், ஜன நாயகம், சமாதானம் ஆகியவற்றிற்காக வேலை செய்வதே உடனடித் தேவையாகும்.

**சிங்கள சோவனிசத்தை வளர்ப்பதன் மூலம் யூ.என்.பி. அரசைத் தூக்கியடிக்க முயலுகின்ற தென்னிலங்கையிலுள்ள சக்திகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

தற்போது ஜே.வி.பி இன் பிரதான நோக்கம் என்னவென்றால் கிராமக் குட்டிமுதலாளித்துவ இளைஞர்கள், இராணுவத்திலுள்ள கீழ்மட் டத்தினர், புத்த பிக்குகள் ஆகிய சமூகக் குழுக்களை இனவாத ரீதியில் திரட்டி அரசுடன் மோதி ஆட்சியைக் கைப்பற்றுவதேயாகும். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மேலாதிக்கவாத சர்வாதிகார ஆட்சிமுறை உருவாகுமே தவிர சோசலிச ஜனநாயகம் ஒரு போதும் உருவாகாது. ஜே. வி. பி யும் ஏனைய சிங்கள முதலாளித்துவ அரசியல் கட்சிகளைப் போல இனவாதத் தையே பயன்படுத்தி முன்னேற முயல்கிறது. எனவே ம.வி.மு.வை ஒரு புரட்சிகர சோசலிசக் கட்சியாக கருதும் சில தென்னிலங்கை இடதுசாரி களுக்கு இத்தாலியில் முசோலினியையும் ஜெர்மனியில் ஹிட்லரையும் ஞாப கப்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம். அவர்களும் ''தேசிய சோசலி சம்'' என்ற போர்வையிலேயே முன்னேறி இறுதியில் ஓர் பாசிச அரசை நிறுவினர்.

இன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி(S.L.F.P), மக்கள் ஐக்கிய கட்சி (M.E.P), மக்கள் விடுதலை முன்னணி(J.V.P) ஆகிய கட்சிகள் தேசிய சிந்தனை'' என்ற சுலோகத்தின் கீழ் ஓர் அணியைத் திரட்டி உள்ளனர் இவர்கள் அனைவரும் மாகாணசபைகளையும், இலங்கை இந்திய ஒப்பந்தத் தையும் எதிர்க்கின்றனர். இவ்வொப்பந்தம் தனி ஈழத்திற்கு வழிவகுக்கும் எனக் கூறி, தமிழ்மக்களுக்கு எவ்வித அடிப்படை உரிமைகளையும் வழங் குவதை முற்றுமுழுதாக எதிர்க்கின்றனர். சிறீலங்கா சுதந்திரக்கட்சி இவ் அணியிலுள்ள பிரதான பாராளுமன்ற அரசியல் கட்சியாகும். அதேவேளை யில் ம.வி.மு. இந்த 'தேசிய சித்தாந்தத்தை' பிரதிபலிக்கும் ஆயுதம் ஏந் திய குழுவாகும்.

எனவே இன்று நிலவும் சூழ்நிலையில் J.V.P யும் S.L.F.P யும் இப்பிற்போக்கு இனவாதச் சித்தாந்தத்தை இரு வேறு தளங்களில் ஒரே நேரத்தில் முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றனர். இந்த இனவாத அணி இன்று தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை எதிர்த்து, இன வாதத்தை எதிர்க்கும் முற்போக்குச் சக்திகளைக் கொலை செய்து, சமாதா னத்திற்கும் ஜனநாயகத்திற்கும் பிரதான முட்டுக் கட்டையாக செயற் பட்டுக் கொண்டிருக்கின்றன.

**J V P க்கும் L T T E க்கும் இடையே பொதுவான அம்சங்களை காண்கிறீர்களா?**

மக்கள் விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு இயக்கங்களின் நிலைப்பாட்டை அவதானிக்கும் போது அவை கிராமிய குட்டிமுதலாளித்துவ சித்தாந்தத்தையே பிரதிபலிக்கின்றன என்பது புலனாகும். அவை இரண்டினதும் தலைமை த்துவம், அங்கத்தவர்கள், சித்தாந்தம், ஆகியன அந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே உருவாகியுள்ளன. இதுவே எல்.ரி.ரி.ஈ இலும் ஜே. வி. பி இலும் நிலவும் குறுகிய அதிதீவிர தேசியவாத மனப்பான்மைக்கும் எதேச் சாதிகாரப் போக்கிற்கும், தனிநபர் பயங்கரவாதத்திற்கும் காரணங்களாகும்.



தோழர் அன்பரசன் (ஜஸ்டின்)

87 பங்குனி 30 - ல்
வெறியர்கள் வெலிக்கடையில் மட்டும் இல்லை
என்பதைப் புலிகள் நிரூபணம் செய்தனர்.
யாழ்ப்பாணத்தில் —
கைதிகளாய் போராளிகளை அடைத்து வைத்திருந்த
அந்த வீட்டின் கதவுகளைத் திறந்து......
வெறிபிடித்த புலிகளின் 'வீரம்' முழங்கியது.
பலியான 65 போராளிகளில் ஒருவனாய்
நீயும் அன்பரசனே...!
மலையகத்திலிருந்து இங்கு ஒரு மாற்றத்தினைக்
கொண்டு வரமுடியும் என்றே கரடுமுரடான பாதையில்
உன் காலடித் தடங்களைப் பதித்தாய்
பின்னால் உன் சுவடுகளில் ஏராளம் கால்கள்
சுரண்டுகிற முதலைகளின் பணத்திமிருக்கும்
கடலை வரை வேரோடும் சாதி வெறிக்கும்
சாவுமணியடிக்கும் படையெடுப்பைத் தயார் செய்தாய்
இவையெல்லாம்
வெறி பிடித்த அந்தத் துவக்குகளுக்கு
விளங்குமா என்ன?




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**ஆடிப்படுகொலைகள் நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் ஆகி விட்டது. இதற்கிடையில் பல்லாயிரம் வகையான இலட்சக் கணக்கான சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன.**

**இந்த ஐந்து ஆண்டுகள் ஈழத்தமிழ்மக்களின் வரலாற்றில் ஓர் உணர்ச்சிப் பிரவாகப் போராட்டத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் உள்ளடக்கியிருக்கின்றன.**

**இந்த ஐந்து ஆண்டுச் சம்பவங்கள் பற்றிய தகவல்களும், அவை பற்றிய சரியான மதிப்பீடும் தமிழ்மக்களுக்கு மிகவும் அவசியமாகும்.**

எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!

இந்த நூற்றாண்டு முடிவடைவதற்கு இன்னும் 12 ஆண்டுகளே உள்ளன.

எனவே, கடந்து முடிந்த ஐந்து ஆண்டுகள் தமிழ் மக்களின் வரலாற்றில் இந்த நூற்றாண்டுக்கு மட்டுமல்ல, அடுத்த நூற்றாண்டுக்கும் அவசியமாகும்.

சுதந்திரமானதொரு ஈழத்தைக் கண்டுவிடலாம் என்ற ஆசையில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களையும், எல்லா வகையான இழப்புக்களையும் தாங்கிக் கொண்டார்கள்.

சுதந்திர வீறுகொண்ட தமிழ் இளைஞர்கள் தியாக சீலர்களாக போராட்டத்தில் குதித்தார்கள்—தமதுயிரைத் துச்சமென மதித்துப் போராடினார்கள்.

உலகம் முழுவதும் இருந்து கிடைத்த அநுதாபமும்,

தமிழ் நாட்டு மக்களினது ஆதரவும்,

இந்தியாவின் உதவியும்—

ஈழ விடுதலைப் போராட்டம் மேலும் மேலும் நம்பிக்கையோடு முன்னேற உதவியாக இருந்தன.

ஈழ விடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்திய சிறீலங்கா அரசு, ஒரு கட்டத்தில் அந்த இயக்கங்களோடு பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையும் உறுதியும் மேலோங்கியிருந்தமையினால் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை என்னும் போர்வையில் ஏமாற்று நாடகம் ஆடுவது திம்புவில் சாத்தியமாகாமல் முக்குடைபட்டுப் பின்வாங்கியது.

அவசர அவசரமாக ஏதாவது ஓர் அரசியல் தீர்வைக் கண்டுவிட வேண்டும் என்று துடித்த பண்டாரியின் ராஜதந்திரங்களும் கூட இலகுவில் சாத்தியமாகாமல் ஆகின.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் நிலவிய தன்னம்பிக்கையையும் ஒற்றுமையையும் உறுதியையும் குலைத்து,

ஈழ விடுதலைப் போராட்டத்தை நாசமாக்கும் வகையில் புலிகளின் தலைமை அதிகார வெறி பிடித்தாடியது.

புலிகளின் உறுப்பினர்கள் பிழையான முறையில் வழிநடத்தப்பட்டார்கள்.

சிறீலங்கா அரசுப் படைகளுக்கு எதிராக ஒருமுகமாகத் திரண்டு நின்ற சக்திகள் பிளவுபட்டன.

ஆயுதம் ஏந்திய போராளிகள் ஒருவரை ஒருவர் குறிபார்க்கும் நிலை தோன்றியது.

முதலில் 'ரெலோ'

பின்னர் 'புளொட்'

இறுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ்

என்று புத்தகங்களை புலிகள் தொடுத்து நடத்தியதால்—

போராளிகள் இறந்தார்கள்;

மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்;

தமிழ் நாட்டு மக்கள் வெறுப்புக் கொண்டார்கள்;

உலக அநுதாபம் திசை திரும்பியது.

ஆக மொத்தத்தில், ஈழ விடுதலைப் போராட்டம் சிதைந்து நாசமாகியது.

ஓராண்டுக்கு மேலாக முகாம்களினுள் அடைபட்டுக் கிடந்த சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களிலும், வீதிகளிலும் ஆர்ப்பரிக்கத் தொடங்கியது—வெற்றி உலாவரத் தொடங்கியது.

## கருத்துப்பகிர்வு

முதலில் ஏனைய இயக்கப் போராளிகளை இயலா நிலைமைக்கு உள்ளாக்கிய புலிகளின் தலைமை—

வடமாராட்சி அடியோடு தனது போராடும் நிலையை இழந்து வேலணைத் துறைகளிலிருந்து இந்தியாவுக்கு வள்ளம் எடுத்துப் புறப்படத் தயாராக இருந்த வேளையில்,

இந்தியாவின் 'மிராஜ்' விமானங்கள் சாப்பாட்டுப் பார்சல்களுடன் வந்து புலிகள் 'வீரத்தை'க் காப்பாற்றியது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமக்கு மட்டும் அங்கீகாரம் கேட்டு நின்ற புலிகள் மிராஜ் விமானங்களில் வந்த சாப்பாட்டுப் பார்சல்களும் தமக்கே தனியுரிமையுடையது என ஈரோஸ்காரர்களுடன் போட்டி போட்டுக் கொண்டது.

பின்னர்—

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம்,

இடைக்கால நிர்வாகம்,

இந்தியப் படைகளுடனான யுத்தம் .........

இப்படி ஓர் நீண்ட கதை.

இந்த நீண்ட கதையை மீட்டெடுத்துப் பார்ப்பது அவசியம்.

ஆனால், அவை வெறுமனே புராணக் கதைகள் போல அமைந்து விடாமல், அனுபவரீதியான பாடமாகஅமைய வேண்டும்.

தியாகிகள் என்றபெயரில் நடந்த துரோகங்களையும்,

உத்தமர்கள் என்ற பெயரில் நடந்த அயோக்கியத்தனங்களையும் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து அடையாளம் கண்டுகொள்வது அவசியமாகும்.

### எமதினிய தமிழ் மக்களே!

இப்போது நாம் அனைவரும் எங்கே நிற்கின்றோம்?

நாம் நடத்திய விடுதலைப் போராட்டம் எங்கே?

நாம் அனைவரும் செய்த தியாகங்கள் தந்த பலன் என்ன?

சரி, நாங்கள் எங்கே நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்?

தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?

எல்லாம் இன்னும் கேள்விகளே!

யார் விடை சொல்வார்கள்!

—அதுவும் கேள்வியே.

தமிழ் மக்கள் கேள்வி எழுப்பும் நிலையில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளனர்.

கேள்விகளை எழுப்பி பதில்களைக் காணுவதற்கான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான சூழல்கள் கூட இல்லை.

துப்பாக்கி பிடித்த மரமண்டையர்களின் கொலை வெறியாட்டம் நடக்கும் இன்றைய காலகட்டம்—

தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய ஆரோக்கியமான வாய்ப்பையோ, எதிர்பார்க்கையையோ தருவதாக இல்லை.

இன்றைய சூழ்நிலைகள் பற்றியோ.

---

## கடிதம்—3

### மேற்குஜெர்மனியிலிருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர் ஒருவர் எழுதிய கடிதம்:

தோழர்களுக்கு புரட்சிகர வணக்கம்!

புதிய கண்ணோட்டம் கிடைத்தது. மற்றும் உங்கள் கடிதங்கள் மூலமும் சகலதும் அறிந்தோம்.

நாம் எமது மக்களின் விடுதலையில் எவ்வளவு உறுதியாகவுள்ளோம் என்பதை எமது நடவடிக்கைகள் மூலம் உணர்த்தியுள்ளோம். ஆனால், புலிகளும் இதர விடுதலை அமைப்புக்களும் எம்மை மக்களிடமிருந்து தனிமைப்படுத்திவிட வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாகவே செயற்பட்டுவருகிறார்கள். இப்போதுதான் நாம் ஈழப்போராட்ட காலகட்டத்தைவிட உறுதியாகவும் சகிப்புத்தன்மையுடனும் செயற்படவேண்டியுள்ளது.

இவ்வளவு இழப்புக்கள் துன்பங்கள் குழி பறிப்புக்களின் பின்னாலும் மன உறுயோடும் சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் அவமானப்படுத்தல்கள், முட்டுக்கட்டை போடல்களைத் தாங்கிப் பொறுமையோடும் நிதானத்தோடும் விடாப்பிடியாகச் செயலாற்றி வருகின்ற எமது தோழர்களை எண்ணி மனம் பெருமிதமடைகிறது. எமது மக்களின் எதிர்கால நலன் குறித்த இன்றைய எமது வேலைகளின் அவசியத்தை அந்நியப்புட்டிருக்கிற — விரக்தியடைந்து வெளியே நிற்கின்ற — இதர தோழர்களின் மத்தியிலும் உணர்த்தப்படல் வேண்டும். அதற்கு ஸ்தாபனத்தின் எதிர்கால போராட்டத் திட்டம் பற்றியும், அதற்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டத் தேவையான வேலைத்திட்டங்களைப் பற்றியும் தோழர்கள் மத்தியில் தெளிவுகளை ஏற்படுத்த வேண்டும்.

ஏனென்றால், எமது ஸ்தாபனத்திலும் ஈழப் போராட்ட காலகட்டத்தில் ஒரு வேகத்தில் போராட வந்த தோழர்களே அதிகம். அதனால்தான் பெரும்பான்மையான தோழர்கள் நினைக்கிறார்கள் எமது போராட்டம் முடிந்து விட்டதென்று. இன்னும் சில தோழர்களுக்குப் போகும் வேகமும் தீவிரமும் போதாதென்ற குழப்பம் அனைவருக்கும் யதார்த்த நிலைமை, நமது அணுகுமுறை, எதிர்காலத் திட்டம் என்பன குறித்துத் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

மேலும், எமது கட்சியைப் பலப்படுத்த வேண்டும். ஏனெனில், நாம் எடுத்துக் கொண்ட போராட்டத்திற்கு கால வரையறை கிடையாது. எமது கட்சியைப் புரட்சிகரக் கட்சியாக்குவதன் மூலம் எதிர்காலப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியும்.

ஈழப் பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் எமது தோழர்களினால் ஏற்படுத்தப்படும் சிறு சிறு தவறுகள் நடைபெறுவதைக்கூட தவிர்க்க வேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அத்துடன் கடந்த காலத்தைப்போல் அகலப்படுத்தல் வேலைகளாயில்லாது மலையக மக்கள் மத்தியில் எமது வேலைகளை ஆழப்படுத்த வேண்டும்.

இவ்வாறு, எமது நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் ஓர் உண்மையான அரசியல் சமூக பொருளாதார மாற்றத்தினை இலங்கைத் தீவில் உருவாக்கப் பாடுபடுவோம்.

தோழர்கள் அனைவரையும் அன்புடன் விசாரித்து முடிக்கிறேன்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்மக்களைச் சுற்றி நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியோ—

தமிழ் மக்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் சரியாக அறிய முடியவில்லை.

கொலைமிரட்டல்களுக்கு அஞ்சி தமிழ்மக்கள் மத்தியில் யாரும் தமது இதயத்தை திறந்து உண்மை பேசுபவர்களாக இல்லை.

தம்மைச் சுற்றிவர கோரமாக நிற்கும் ஆயுதங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் மௌனத்தையே கடைப்பிடிக்க விரும்புகின்றனர்.

இல்லாவிட்டால், நிலமைக்குத் தக்கபடி ஏதாவது சொல்லிவிட்டு தப்பிக் கொள்வதில் அக்கறை காட்டுகின்றனர்.

அன்பார்ந்த தமிழ் மக்களே!

இந்நிலைமைகளுக்காக உங்களை குற்றம் சொல்லவும் முடியவில்லை. அதேவேளை, குற்றம் சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

இதனால் தான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிறது.
ஏனெனில், வேறு எவ்வித வழிமுறையினாலும் உங்களின் கருத்தை அறிய முடியவில்லை.

ஒரு காலத்தில் தேர்தலை எதிர்த்தவர்களும் நாங்கள் தான்.

அன்று போராட்டம் முன்னோக்ிச்சென்றுகொண்டிருந்த காலகட்டம்

இன்றுபோராட்டமெல்லாம் நாசமாகி, தமிழ்மக்களின் வாழ்வும் நிலையும் சீரழிந்து கிடக்கும் காலகட்டம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தலில் பங்குபற்றுமா? பங்குபற்றாதா?

என்ன முறையில் பங்குபற்றும்? என்பதெல்லாம் இரண்டாம் பட்சவிடயங்கள் ஆகும்.

ஆனால்—

எப்படியாயினும் தமிழ்மக்கள் மத்தியில் தேர்தல் ஒன்றை நடத்துவது;

அதற்கான சூழ்நிலையை உருவாக்குவது என்பதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளது.

மக்கள்பெயரில் நடக்கும் கொலைகளை—கொள்ளைகளை நிறுத்தவும்,

மக்கள் பெயரில் பேரவியாபாரம் நடத்துபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும்,

ஒரு தேர்தல் தமிழ்மக்கள் மத்தியில் அவசியமாக உள்ளது.

தமிழ்மக்கள் மத்தியில் இன்று ஒரு தேர்தல் தேவைப்படுகின்றது என்பது—சிலருக்கு பதவிகள் வழங்குவதற்காக அல்ல, தமிழ்மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக;

தமிழ்மக்களின் பெயரில் இங்கு நடக்கும் அநியாயங்களை முடிவிற்கு கொண்டு வருவதற்காக,

தலைமையற்ற தமிழ்ச் சமுதாயம் தங்களுக்காக யாரையாவது எதிர்பார்த்திருக்கும் அகதிநிலையை—
அநாதைநிலையை மாற்றி அமைப்பதற்காக—இங்கு ஒரு தேர்தல் அவசியமாகி நிற்கின்றது,

ஆடிப்படுகொலைகள் நடந்து முடிந்து ஐந்து வருடங்கள் நிறைவேறியிருக்கும் இந்த வேளையில்,

இந்திய—இலங்கை சமாதான ஒப்பந்தம் உருவாகி ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கும் இந்தச் சூழ்நிலையில்—

எதிர்காலம் பற்றி ஒரு கணம் தெளிவாகச் சிந்திப்போமாக! ●




படத்துக்கு நன்றி THE ISLAND



## கடிதம்—4

## 'துக்ளக்' கில் வெளியான கடிதம் ஒன்றிலிருந்து ஒரு பகுதி:

எல்.டி.டி.ஈ. இயக்கத்தின் நோக்கின்படி, மற்றைய இயக்கத்தைச் சேர்ந்த சகல போராளிகள், எல்.டி.டி.ஈ. இயக்கம் கையாளும் வழிமுறைகளைப் பாதகமாக விமர்சிப்பவர்கள், கண்மூடித்தனமாக அவைகளை ஆதரிக்காத அரசியல்வாதிகள், பொதுமக்கள் ஆகிய எல்லோருமே இனத் துரோகிகளா? உயிர் வாழ லாயக்கில்லாதவர்களா?

ஈழத் தமிழர்களின் விடிவுக்குப் போராடுவதற்கு அரசியல் வழிவகைகளை வகுத்து, அவற்றை மேற்கொள்வதற்கு எல்.டி.டி.ஈ. தவிர, வேறு யாருக்குமே அருகதையோ, உரிமையோ இல்லையா?

வெளிநாடுகளுக்குச் சென்று வாழ வாய்ப்பிருந்தும், நாட்டை விட்டுத் தப்பியோடத் தருணங்கள் இருந்தும், ஈழ விடுதலை ஆர்வத்தினால் உந்தப்பட்டு, ஏதோ ஒரு காரணத்தால் ஈர்க்கப்பட்டு டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப் போன்ற இயக்கங்களில் சேர்ந்து போராடியவர்கள், போராட முனைந்தவர்கள் எல்லோருமே தமிழ் இனத் துரோகிகளா?

தனிப்பட்ட சிலரின் அடாவடித்தனங்களைச் சாக்காகச் சொல்லி, ஒட்டு மொத்தமாக அந்த இயக்கங்களைச் சார்ந்தவர்களைக் கொன்று குவித்த 'புலிகளின்' கைகளில் பட்ட ரத்தம் இன்னமும் காய்ந்திருக்காதே!

இந்தக் கொலைகளினால்தான் வளர்ந்து வந்த விடுதலைப் போராட்டம் பலவீனப்பட்டது என்பதும், அநியாயமாகத் தாக்கப்பட்ட போராளிகளில் பலர், தங்களைத் தாக்கிய 'புலிகள்' இயக்கத்தை எல்லா வகையிலும் ஒழிக்க முற்படுவது இயற்கை என்பதும் வேறு விஷயம். வினை விதைத்தால், தினையா வளரும்?

எத்தனையோ கொலைகள்! ஒன்றை மட்டும் உதாரணத்திற்குக் குறிப்பிடுகிறேன். யாழ்ப்பாண - செயின்ட் ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் ஆனந்த ராஜா படித்துப் பட்டம் பெற்றவர். தனது அயராத உழைப்பால், சமுதாயத்தின் நலன் கருதி எத்தனையோ சிறந்த மாணுக்கர்களை உருவாக்கியவர். அவரை 'இலங்கை ராணுவத்துடன் உறவு கொண்டாடுகிறார்' எனக் குற்றம் சாட்டி, கேவலம் ஒரு படிப்பறிவற்ற, மனிதாபிமானமற்ற புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

ஆனால், பின்னர் அதே புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிட்டு, ரஹீம் போன்ற தலைவர்கள், இலங்கை ராணுவத்தின் தலைவர்களுடன் சுமுக உறவு கொண்டாடினார்கள். சகஜமாகப் பழகினார்கள். ராணுவத் தலைவர்களுடன் சேர்ந்து சிரித்து போஸ் கொடுத்த படங்கள் கூடப் பத்திரிகைகளில் வெளி வந்தனவே!

தாங்கள் வழங்கும் மரண தண்டனைகள், மக்களால் 'நியாயமானவை' என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவாம். மக்கள் தங்கள் உண்மையான எண்ணங்களை வெளிப்படுத்த எங்கே வழியிருக்கிறது?

'எதிர்த்துப் பேசினால், இணங்காவிட்டால் தங்கள் உயிருக்கும், உடைமைக்கும் பங்கம் ஏற்பட்டு விடும்' எனப் பயந்து மக்கள் மௌனமாக இருப்பதை, 'புலிகளின்' பாதகச் செயல்களுக்கு மக்கள் கொடுக்கும் சம்மதம் என எப்படிக் கொள்ள முடியும்?

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் 'ஈழ நாடு' பத்திரிகை அலுவலகம் - அப்பத்திரிகை 'இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்தது' என்பதற்காக - எல்.டி.டி.ஈ. இயக்கத்தினால் தகர்க்கப்பட்டது. எத்தனையோ சிரமங்களுக்கிடையில் ஆரம்பித்து நடாத்தப்பட்ட பத்திரிகை ஸ்தாபனம், ஒரு கணத்தில் நாசமாக்கப்பட்டு விட்டது. அப்பத்திரிகையின் பிரசுரத்தையே நம்பி வாழ்ந்த, அங்கு வேலை செய்த அத்தனை குடும்பங்களும் நிர்க்கதியாகி விட்டார்கள்; வாழ வழியற்றுத் தவிக்கிறார்கள். இதையெல்லாம் யார் கேட்பது?



மேலும், இந்தியா தங்களுக்குப் பயிற்சியோ, ஆயுதங்களையோ ஒரு போதும் தரவில்லை எனக் குறிப்பிட்டிருப்பது, 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கு' ஒப்பாகும்.

.................................

........................ உண்மையிலேயே அல்லல்படுவது, அன்றாட உணவிற்கே வழியற்று, ஒரு பக்கத்தில் இலங்கை அரசாங்கத்தின் கெடுபிடி, மற்ற பக்கத்தில் எல்.டி.டி.ஈ-யின் அராஜகம், மற்றைய இயக்கங்களின் வன்முறைகள் என்று 'இருதலைக் கொள்ளி எறும்பு' போல், விடிவே இல்லையா என வேதனையால் வெந்து உழல்வது, இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் சாதாரண மக்களே!

ஒன்று மட்டும் தெளிவாகக் கூறலாம்:

ஈழத் தமிழர்கள் சமாதானத்துடன், பாதுகாப்புடன், உரிமைகளுடன் வாழ வேண்டுமானால், தற்போதைய சூழ்நிலையில், அரசியல் நிர்ப்பந்தத்தில், எல்.டி.டி.ஈ. இயக்கமும், மற்றைய இயக்கங்களும் (டி.யூ.எல்.எஃப். உட்பட) ஒன்று சேர்ந்து, வன்முறைகளைக் கைவிட்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவின் துணை கொண்டு அரசியல் ரீதியில் எவ்வளவு சலுகைகளை, உரிமைகளைப் பெறலாமோ, அவற்றைப் பெற முயல வேண்டுவது அவசியம்.

வெறும் ஆயுத பலத்தாலும், பிரசாரத்தாலும், பயமுறுத்தல்களாலும் தங்கள் தலைமைத்துவத்தை, முக்கியத்துவத்தை நிறுவ முயற்சிப்பதைக் கைவிட்டு, நடைபெறப் போகும், ஒன்று சேர்ந்த வடக்கு-கிழக்கு மாகாணத் தேர்தலில் எல்லா இயக்கங்களும் பங்கு பெற வழி செய்து, மக்கள் தங்கள் பிரதிநிதிகளைச் சுயமாகத் தேர்ந்தெடுக்க விட வேண்டும். பலாத்காரப் பயமின்றி மக்கள் தங்களது தீர்ப்பைக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களுக்கு நேசக் கரம் நீட்டப்பட வேண்டும். இலங்கையில் சிங்கள மக்களின் வாழ்வும், தமிழர்களது வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர வேண்டும். எவ்வளவுதான் சிரமம் என்றாலும், இதை மற்றவர்களுக்கும் (சிங்களவர்கள் உட்பட) உணர்த்தியாக வேண்டும்.

தற்போதைய அரசியல், சமூகச் சூழ்நிலையில், இதுவே ஈழத் தமிழர்களின் விமோசனத்திற்கு, மகிழ்விற்கு, சமாதான வாழ்விற்கு, வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு—7 1988 ஆவணி 01.

# புதியகண்ணோட்டம்



## LTTE intransigence has caused IPKF failure

A. Amirthalingam,
Leader Tamil United
Liberation Front

The IPKF was brought to Sri Lanka for two purposes: to ensure the safety and security of the people of the North and East and to get the militant groups including the LTTE to surrender their arms. Compared with the violent and genocidal situation that prevailed in the North and East before the accord was signed, the IPKF seems to have restored peace to a great degree. It is in fulfilling the second obligation, that of getting the militants to surrender their arms, that the IPKF has not succeeded.

The failure of the IPKF to have all the arms surrendered was because of the change in attitude of the LTTE. At first the LTTE accepted the accord and agreed to surrender its arms. After the speech made by Prabhakaran at Sudumalai Amman Kovil in Jaffna on August 4th we thought that the LTTE was sincere in its desire for peace and would co-operate with the IPKF. In fact, the LTTE was given a very good deal in September when the Sri Lankan government agreed to set up an interim administration for the North and the East with the LTTE in a majority.

For some inexplicable reason the LTTE went back on the agreement and carried on its campaign. It attacked Sinhala and Muslim civilians in the East, causing the IPKF to crack down on them. It must, however, be said that it was the colonisation programme by the government that angered the LTTE. In the course of the confrontation between the IPKF and the LTTE many civilians died. There was much damage to property and thousands were rendered refugees. As a result, the IPKF is still continuing with its task.

The government of India tried until recently to come to a deal with the LTTE to make it surrender its weapons peacefully. This effort has, unfortunately, been unsuccessful. Therefore the IPKF is now continuing its military campaign against the LTTE. The TULF suggested a common slate of candidates for provincial polls in the North and the East as a way out of the impasse. This, too, has not been accepted. These are the reasons why the IPKF continues to be here, one year after the accord was signed.

## எமதன்புக்குரிய தமிழ்மக்களே!

### ஆங்காங்கே பஸ் பிரயாணிகளை நாம் 'புதிய கண்ணோட்டம்' வாங்கும்படி நிர்ப்பந்திக்கிறோம் — ஏன்?

இன்றைய கொலைக்களச் சூழ்நிலையில், எமது பத்திரிகையை வெளிப்படையாகக் கேட்டு வாங்குவது கூடப் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்று தயங்குகிற மக்களை நாம் புரிந்து கொள்கிறோம்.

எமது மக்களுக்குக் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பயமற்ற வளமான வாழ்க்கை என்பவற்றை வழங்குவதே எமது உடனடிக் கடமையெனச் செயற்பட்டு வருகின்ற நாம், எமது கருத்துக்கள் மக்களைச் சென்றடைவதிலுள்ள தடைகளை நீக்கவும் விரும்புகின்றோம்.

'புதிய கண்ணோட்டம்' பத்திரிகை ஒன்றினது தயாரிப்புச் செலவு 1 ரூபா 60 சதம். கொள்ளைக்காரர்களிடமும், கப்ப வசூல் சண்டியர்களிடமும் நாளாந்தம் உடமைகளைப் பறிகொடுத்து வரும் உங்களிடம் எமது பத்திரிகை ஒன்றுக்கு இரண்டு ரூபாவையே நாம் கேட்கிறோம்.

சில சமயங்களில் 5-10 நிமிடங்களுக்கு பஸ்ஸை நிறுத்தி வைத்தும் பத்திரிகையை விநியோகிக்கிறோம். எமது தாயகத்தில் ஓர் உண்மையான அமைதிச் சூழ்நிலை வரும்வரையில் இப்படியான அணுகுமுறைகள் தவிர்க்க முடியாததாகவே இருக்குமென்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம்.

எனவே, எமது நோக்கத்தின் நியாயத்தன்மைகளைப் புரிந்து கொண்டு அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பஸ் சாரதி, நடத்துனர்களையும், மக்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!



### உ.ர.'துணைக்..?

இதுவும் போராட்டம் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த காலத்தில்தான்....

அந்தத் தெருவழியே வயதானவர் ஒருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். தெருவின் சரியான பக்கத்தால்தான் அவர் சைக்கிள் வந்து கொண்டிருந்தது.

எதிர்ப்புறமிருந்து மோட்டார்சைக்கிள் ஒன்று உறுமியபடி ... அதில் 'பொடியள்' இரண்டு பேர்.

எதிர்பாராத விதமாய் மோட்டார்சைக்கிள் பெரியவரின் சைக்கிளில் மோதியது. பெரியவர் நிலை குலைந்து விழுந்தார். காலிலும் தோளிலும் பலமான காயங்களோடு தள்ளாடியபடி எழுந்தார் பெரியவர்.

சுற்றிநின்ற குழுமியவர்களும் இளைஞர்களும் பெரியவர் என்ன பேசப்போகிறாரோ என்று திகைத்தபடி பார்த்திருக்க —

இளைஞர்களை நோக்கித் தள்ளாடியபடி வந்த பெரியவர் கையெடுத்துக் கும்பிட்டார்:

"தம்பியவை! என்னிலதான் பிழை- மன்னிச்சுக் கொள்ளுங்கோ!"

## அமைதிப் படை தொடர்ந்தும் இங்கிருப்பது ஏன்?

—அமிர்தலிங்கம் கூறும் காரணங்கள்—

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு இரண்டு நோக்கங்களுக்காக கொண்டுவரப்பட்டது.

1—வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

2—தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட போராளிகளின் ஆயுதக்கையளிப்பை நடைமுறைப்படுத்துவது.

ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முதல் வடக்கு கிழக்கில் நிலவிய இனப்படுகொலை நிலையோடு ஒப்பிடும் போது இந்திய அமைதிப்படை குறிப்பிடத்தக்களவு அமைதியை அங்கு நிலை நாட்டியுள்ளது.

தனது இரண்டாவது கடமைப்பாடாகிய 'ஆயுதங்களை மீளப்பெறுதல்' என்பதை நிலைநாட்டுவதில் அமைதிப்படை வெற்றி அடையவில்லை. இத்தோல்விக்கு காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றமே.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முதலில் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. ஆயுதக் கையளிப்பிற்கு உடன்பட்டது.

ஆவணி 4ந் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள சுதுமலை அம்மன் கோவிலில் பிரபாகரன் வழங்கிய உரையைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்தை உருவாக்குவதில் உண்மையானதாக இருக்குமெனவும், அமைதிப்படையுடன் ஒத்துழைக்குமென்றும் நாம் நினைத்தோம்.

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை சிறீலங்கா அரசாங்கம் ஏற்படுத்தும் போது புரட்டாதி மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெரும்பான்மை வழங்கப்பட்டது.

வெளிப்படுத்த முடியாத சில காரணங்களினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் ஒப்புக் கொண்டதிலிருந்து பின்வாங்கியது; அமைதிப் படை அதன்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள, முஸ்லீம் மக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

சிங்களக் குடியேற்றத் திட்டத்தின் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோபம் கொண்டதெனக் கூறப்படுகின்றது.

அமைதிப் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலின் காரணமாக பல பொதுமக்கள் இறந்தார்கள்; பெருந்தொகையான சொத்துக்கள் சேதமாக்கப் பட்டன; பல்லாயிரக் கணக்கானவர்கள் அகதிகளானார்கள். இதன் விளைவாக இந்திய அமைதிப் படை தொடர்ந்தும் தன் கடமைகள் மேற்கொண்டு வருகிறது.

அண்மைக் காலம்வரை இந்திய அரசாங்கமானது, தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து அமைதியான முறையில் ஆயுதங்களைப் பெறுவதற்காக முயற்சித்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த முயற்சிகள் பலனளிப்பவையாக இல்லை.

ஆகவே தான், அமைதிப்படை தொடர்ந்தும் தனது இராணுவ நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக மேற்கொண்டு வருகின்றது.

சமாதானத்தை உருவாக்குவதற்கான ஒரு வழியாக வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கென பொது வேட்பாளர் பட்டியலொன்றை வைக்கும் ஆலோசனையை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முன் வைத்தது. அதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஒப்பந்தம் கையெழுத்திட்டு ஒரு வருடமாகியும் இந்திய அமைதிப் படை தொடர்ந்தும் இங்கிருப்பதற்கு இதுவே காரணங்களாகும்.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் திரு. அ. வ. அருண்மொழித்தேவன் அவர்களினால் 119, பல்கலைக் கழகவீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ - சி. ஆர். சி. அச்சகத்தில் 01. 08. 1988. அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்